## சென்னையில் த.மு.மு.க அமைப்பின் சமூக நீதி மாணவர் இயக்க வெள்ளி விழா:

# சிறுபான்மையின மக்கள் கேட்டதையெல்லாம் செய்து கொடுக்கக்கூடிய ‘திராவிட மாடல்’ அரசுக்கு துணையாக என்றும் நீங்கள் இருக்க வேண்டும்!

## த.மு.மு.க அமைப்பின் மாணவர் அணி மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பேச்சு!

**சென்னை, பிப். 11 -**

**சென்னை வள்ளுவர் கோட்டத்தில் த.மு.மு.க அமைப்பின் மாணவர் அணியான சமூக நீதி மாணவர் இயக்கத்தின் வெள்ளி விழா மாநாட்டில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு வாழ்த்திப் பேசினார்.**

**விழாவில், துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சிறந்த கல்வியாளர் விருதுகளை வழங்கி, “மக்கள் சேவையையும் கல்வி சேவையையும் கால் நூற்றாண்டாக செய்து வரும் தங்களின் பணிகள் மென்மேலும் சிறக்கட்டும்” என்று வாழ்த்தினார்.**

**அப்போது அவர், “சிறுபான்மையின மக்கள் கேட்டதையெல்லாம் செய்து கொடுக்கக்கூடிய தலைவர், முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர், நம்முடைய தலைவர் இருக்கிறார். ஆகவே, உங்களுக்காக இன்னும் அதிகமாக உழைக்க, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும் நம்முடைய திராவிட மாடல் அரசும் காத்துக்கொண்டிருக்கிறது. சிறுபான்மையின மக்கள் எப்போதும் போல நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்றும் துணையாக இருக்க வேண்டும்” என்று குறிப்பிட்டார்.**




விழாவில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய வாழ்த்துரை வருமாறு: -

தொடர்ந்து மூன்று நாட்கள் சுற்றுப் பயணம். தொடர்ந்து மூன்று நாட்களாகப் பேசி, நேற்று உங்களில் சில பேர் பார்த்திருக்கக்கூடும், விருதுநகரில் இளைஞர் அணி நிர்வாகிகள் சந்திப்பு கிட்டத்தட்ட ஒரு லட்சம் நிர்வாகிகளோடு ஒரு சந்திப்பு. எல்லாம் முடித்துவிட்டு நேற்று நள்ளிரவு தான் சென்னைக்குத் திரும்பினேன்.

### சமூக நீதி மாணவர் இயக்கம்!

உடல் கொஞ்சம் சோர்வாக இருந்தது. இருந்தாலும், இன்றைக்குக் காலையில் வட சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகள், அதேபோல் என்னுடைய சேப்பாக்கம் திருவல்லிக்கேணி தொகுதியில் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். இருந்தாலும் இந்த நிகழ்ச்சிக்கு நிச்சயம் வந்தாக வேண்டும். நம்முடைய சமூக நீதி மாணவர் இயக்கத்தின் வெள்ளி விழாவில் நான் நிச்சயம் கலந்துகொள்ள வேண்டும் என்ற அந்த உணர்வோடு வந்திருக்கிறேன்.

இந்த வாய்ப்பை எனக்கு அளித்த மனிதநேய மக்கள் கட்சியின் தலைவர் பேராசிரியர் அண்ணன் ஜவாஹிருல்லா அவர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அப்துல் சமது அவர்களுக்கும், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் பொதுச்செயலாளர் பேராசிரியர் அண்ணன் ஹாஜா கனி அவர்களுக்கும், இங்கு வந்திருக்கக்கூடிய அனைத்து நண்பர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### எனக்குப் பெருமை!

2020ஆம் ஆண்டு நம் யாராலும் மறக்க முடியாத ஆண்டு. கொரோனா காலகட்டத்தில் இதே தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தின் வெள்ளி விழா மாநாடு நடந்தது. அந்த மாநாட்டில் காணொலிக்காட்சி மூலமாக நம்முடைய கழகத் தலைவர், தமிழக முதலமைச்சர் அவர்கள் கலந்துகொண்டார்கள். இன்று சமூக நீதி மாணவர் இயக்கத்தின் வெள்ளி விழாவில் நான் வந்து கலந்து கொண்டிருக்கிறேன், இது எனக்குப் பெருமை. இதில் கூடுதல் மகிழ்ச்சி என்னவென்றால், கலைஞர் கட்டியெழுப்பிய வள்ளுவர் கோட்டத்தில் மாணவர் இயக்கத்தின் வெள்ளி விழா நிகழ்ச்சி சிறப்பாக நடந்துகொண்டிருக்கிறது.

இதில் எங்களுடைய இளைஞர் அணிக்கும் இந்த மாணவர் பேரவைக்கும் ஒரு நெருங்கிய உறவு உண்டு, பொருத்தம் உண்டு. ஏனென்றால், கடந்த டிசம்பர் மாதம் இதே அரங்கில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் இளைஞர் அணி நடத்துகின்ற `அறிவுத் திருவிழா’ என்கின்ற ஒரு நிகழ்ச்சியை 11 நாட்கள் இதே அரங்கில் நாங்கள் நடத்திக் காட்டினோம். இன்று அதே அரங்கில் உங்களையெல்லாம் சந்திப்பது எனக்குக் கூடுதல் மகிழ்ச்சி.

### மிகச்சிறந்த பேச்சாளர்கள்!

சில விழாக்களில் மேடைமேல் அமர்ந்திருப்பவர்கள் அனைவருமே மிகப்பெரிய பேச்சாளர்களாக, சிறந்த பேச்சாளர்களாக இருப்பார்கள். ஆனால், இந்த விழாவில் மேடைமேல் மட்டுமல்ல, எனக்குத் தெரியும் மேடைக்குக் கீழே அமர்ந்திருக்கக்கூடிய உங்களிலும் மிகச் சிறந்த பேச்சாளர்கள், எனக்குத் தெரிந்த பேச்சாளர்களே நிறைய பேர் இருக்கிறார்கள். ஆயிரம் ஆசிரியர்களைக் கூடச் சமாளித்துவிடலாம், ஆனால், ஓர் அறிவார்ந்த லட்சியத்தோடு இருக்கக்கூடிய ஒரு மாணவன் கேட்கின்ற கேள்வியை நம்மால் சமாளிக்க முடியாது.

அதிலும் த.மு.மு.கவின் இந்த சமூக நீதி மாணவர் இயக்கத்தைப் பற்றி நான் உங்களுக்குச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை. கல்வியறிவு, அரசியலறிவு, மார்க்க அறிவு என அனைத்திலும் நீங்கள் வல்லுநர்கள். மேடையிலிருந்து உங்களையெல்லாம் பார்க்கும்போது `பிளாக் அண்ட் ஒயிட் சோல்ஜர்ஸ்’ (Black and White Soldiers) மாதிரி அமர்ந்திருக்கிறீர்கள். உங்களின் எழுச்சியைப் பார்க்கும்போது மிகப்பெருமையாக இருக்கிறது.

### கொள்கை - லட்சியம்!

ஏனென்றால், இது ஏதோ கொள்கை இல்லாமல், கொள்கையென்றால் என்னவென்றே தெரியாமல், லட்சியமென்றால் என்னவென்றே தெரியாத கோட்பாடு இல்லாத கூட்டம் கிடையாது. கொள்கையோடு, லட்சியத்தோடு செயல்படுகின்ற ஒரு மிகச்சிறந்த மாணவர் படை. அப்படிப்பட்ட உங்கள் மத்தியில் பேசுவது எனக்கு இன்னும் கூடுதல் பெருமை. ஒரு இயக்கத்தைத் தொடங்கி நடத்துவது சாதாரண விஷயம் கிடையாது. ஆனால், இந்த சமூக நீதி மாணவர் இயக்கத்தை 25 ஆண்டுகளாக நீங்கள் வெற்றிகரமாக நடத்தி வருகிறீர்கள், அதற்கு முதலில் என்னுடைய வாழ்த்துகள், பாராட்டுகள்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இந்த சமூக நீதி மாணவர் இயக்கத்திற்கும் நிறைய ஒற்றுமைகள் உண்டு. உங்கள் இயக்கத்தின் பெயரிலேயே `சமூக நீதி’ என்ற வார்த்தை இருக்கும். உங்களின் இயக்கத்தின் பெயரே சமூக நீதி மாணவர் இயக்கம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் அடிப்படைக் கொள்கையே சமூக நீதிதான். அதுமட்டுமல்ல, இங்கு இருக்கக்கூடிய அண்ணன் ஜவாஹிருல்லாவாக இருக்கட்டும், அண்ணன் ஹாஜா கனி போன்றவர்கள் எல்லாம் பேராசிரியர்கள், படித்தவர்கள்.

### முத்தமிழறிஞர் கலைஞர்!

எங்களின் தலைவர்கள் பேரறிஞர் அண்ணா அவர்கள் ஆசிரியர் பணியில் இருந்தவர். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் கல்வி நிலையங்களில் ஆசிரியராக இல்லை, ஆனால் அவர் ஆசிரியர்களுக்கெல்லாம் ஆசிரியராகத் திகழ்ந்தவர். அதேபோல் எங்கள் இயக்கத்தின் பொதுச்செயலாளராக இருந்தவர் இனமானப் பேராசிரியர் அவர்கள். இப்படி நம் இரண்டு இயக்கமுமே ஆசிரியர்களிடமிருந்து அரசியல் பாடம் படித்துக்கொண்டிருக்கிறோம். அதனால்தான் இன்றைக்கும் களத்தில் நாம் எல்லாரும் நிற்க முடிகிறது, மக்களைச் சந்தித்து மக்களுக்காகப் பணியாற்ற முடிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகம் உருவானதே ஒரு மாணவர் சக்தியால்தான். அதுபோலத்தான் இன்று உங்கள் இயக்கத்தின் வளர்ச்சிக்கும் மாணவர்கள் நீங்கள் அடித்தளமாக நிச்சயம் இருப்பீர்கள். அந்த உரிமையோடு இன்று இந்த நிகழ்ச்சிக்கு வந்திருக்கிறேன்.

சமூக நீதி மாணவர் இயக்கத்திடம் எனக்கு மிகவும் பிடித்த விஷயமே இப்போதுகூட இந்த காணொலிக் காட்சி போட்டார்கள், கழகத் தலைவர் முதலமைச்சர் அவர்கள் பாராட்டினார்கள். உங்களிடம் மிகவும் பிடித்த விஷயமே உங்களின் மக்கள் சேவைதான். உங்களின் செயல்பாடுகள், உங்களின் பொதுநலப் பணிகளையெல்லாம் பார்த்து நிறைய பேர் ஆச்சரியப்பட்டிருக்கிறார்கள், நானும் ஆச்சரியப்பட்டிருக்கிறேன். எந்த விளம்பரமும் இல்லாமல் செய்கிறீர்கள். இப்போதெல்லாம் அனைவருமே செய்வது விளம்பரத்திற்காகத்தான். அந்த மாதிரி நேரத்தில் எந்தவிதமான விளம்பரமும் இல்லாமல் மக்களுக்காகப் பல்வேறு பொதுநலச் சேவைகளை நீங்கள் செய்து கொண்டிருக்கிறீர்கள்.

கொரோனா காலத்தில் உயிரைப் பணயம் வைத்து, நீங்கள் செய்த சேவைகளை மக்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள். மக்களுக்காக நீங்கள் செய்த ஆம்புலன்ஸ் சேவை, ஊரடங்கில் முடங்கிக்கிடந்த மக்களுக்கு நீங்களாகவே சென்று உணவு வழங்கியது, இறந்தவர்களின் உடல்களை உரிய மரியாதையோடு அடக்கம் செய்தது என அந்தக் கடினமான காலத்தில் நீங்கள் செய்த சேவையைத் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள். அதேபோல் புயல், மழை ஏற்பட்டிருக்கின்ற அந்த காலங்களில் மக்களுக்கு நீங்கள் செய்து வருகின்ற நிவாரண உதவிகளை, குறிப்பாக நீங்கள் செய்து வருகின்ற இரத்ததானம், இவற்றையெல்லாம் தமிழ்நாட்டு மக்கள் என்றைக்கும் மறக்க மாட்டார்கள்.

இந்தச் சேவைகளை எல்லாம் விட ஏழை எளிய மாணவர்களுக்குச் சமூக நீதி மாணவர் இயக்கம் செய்கின்ற கல்விச் சேவைகள் மிக மிக முக்கியமானது, பெரியது. ஒவ்வொரு மாவட்டத்திலும் வசதி இல்லாத மாணவர்களுக்கு நீங்கள் நிதி உதவி வழங்குகிறீர்கள். மக்களின் மனங்களை அன்பால் மட்டுமே வெல்ல வேண்டும் என்று நீங்கள் எடுக்கின்ற எல்லா முயற்சிகளுக்கும் எங்களின் பாராட்டுகள், வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

### கண்ணியமிக்க காயிதே மில்லத்!

திராவிட முன்னேற்றக் கழகத்திற்கும் இஸ்லாமிய மக்களுக்குமான அந்தப் பந்தம் இன்று நேற்று உருவான பந்தம் கிடையாது. கண்ணியமிக்க காயிதே மில்லத் அவர்களுக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும் இருந்த ஆழமான நட்பு உங்கள் அத்தனை பேருக்கும் தெரியும். அரசியலையெல்லாம் கடந்து ஓர் உணர்வுப்பூர்வமான நட்பு அவர்கள் இரண்டு பேருக்குள்ளும் இருந்தது.

கலைஞர் வழியில் இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இஸ்லாமியச் சொந்தங்களைத் தன் சொந்த உறவாகக் கருதுகிறார். இன்னும் பெருமையாகச் சொல்ல வேண்டுமென்றால், நான் பல மேடைகளில் பெருமையாகப் பேசியிருக்கிறேன். என்னுடைய பொது வாழ்க்கையில் நான் முதன்முறையாக ஒரு போராட்டத்தில் ஈடுபட்டு கைது செய்யப்பட்டது எதற்காகத் தெரியுமா? ஒன்றிய அரசு அப்போது கொண்டு வந்த சிறுபான்மை மக்களுக்கு எதிரான சி.ஏ.ஏ (CAA) சட்டத்தை எதிர்த்து, அந்தச் சட்ட நகலைக் கிழித்ததற்காக முதன்முதலாகக் கைதானவன் நான். இதை நான் என்றைக்கும் பெருமையாகச் சொல்வேன்.

இது மாணவர் இயக்கத்தின் விழா. இன்று மாணவர்களுக்கு நம்முடைய திராவிட மாடல் அரசு எண்ணற்ற திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், கல்லூரிகளில் புதுமைப்பெண் திட்டம், மாணவர்களுக்குத் தமிழ்ப்புதல்வன் திட்டம், ‘நான் முதல்வன்’ திட்டம்; இன்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மட்டும் 10 லட்சம் கல்லூரி மாணவர்களுக்கு மடிக்கணினிகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்.

ஏன் இதையெல்லாம் செய்கிறோம்? ஓர் அரசு ஏன் இவ்வளவு முயற்சி எடுக்கிறது? முதலமைச்சர் ஏன் கல்விக்கு இவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார்? எல்லாரும் படிக்க வேண்டும் என்று நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து சொல்லிக்கொண்டே வருகிறார். எல்லாரும் முன்னேற வேண்டும் என்றுதான் இந்தத் திட்டங்களை எல்லாம் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் தொடர்ந்து செயல்படுத்தி வருகிறார்.

ஆனால், ஒன்றிய பாசிச பா.ஜ.க அரசு என்ன செய்கிறது? அவர்களின் கொள்கை யாரும் படிக்கக் கூடாது என்பதுதான். குறிப்பாகச் சங்கிகளுக்கு, ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, குறிப்பாகச் சிறுபான்மையின மாணவர்கள் படித்து முன்னேறிவிடக் கூடாது என்று ஒன்றிய அரசு, சங்கி கூட்டம் நினைக்கிறது. அதனால்தான் சிறுபான்மையின மாணவர்களுக்காகக் கொடுக்கப்பட்ட கல்வி உதவித்தொகையைக் கூட இன்று ஒன்றிய அரசு நிறுத்திவிட்டார்கள்.

### உண்மையான சமூக நீதி!

இந்த அநீதியை நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். எதிர்த்ததோடு மட்டும் நிற்கவி ல்லை. ஒன்றாம் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை படிக்கக்கூடிய சுமார் ஒரு லட்சம் சிறுபான்மையின மாணவர்களுக்கு மாதம் 1,000 ரூபாய் கல்வி உதவித்தொகையை நம்முடைய முதலமைச்சர் வழங்கி வருகிறார். இதுதான் உண்மையான சமூக நீதி அரசு.

### தி.மு.க. மாணவர் அணி போராட்டம்!

உங்களின் இயக்கம் சார்பாக மாணவர்களின் கல்வி உரிமையைப் பாதுகாக்கப் பல போராட்டங்களை நீங்கள் நடத்தியிருக்கிறீர்கள். மாநில அரசு உருவாக்கிய பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை யு.ஜி.சி (UGC) கையில் எடுக்க முயன்றபோது, 2025ஆம் ஆண்டு டெல்லியில் தி.மு.கவின் மாணவர் அணி மிகப்பெரிய ஒரு போராட்டத்தை நடத்தியது. அதில் சமூக நீதி மாணவர் இயக்கம் நீங்களும் கலந்துகொண்டு உங்களின் ஆதரவைத் தெரிவித்தீர்கள்.

அதேபோல் ஆளுநர் ஆர்.என். ரவிக்கு எதிராக ஒரு போராட்டம், புதிய கல்விக் கொள்கைக்கு எதிரான போராட்டம் எனத் திராவிட முன்னேற்றக் கழகம் கல்விக்காக எந்தப் போராட்டத்தை நடத்தினாலும், அந்தப் போராட்டங்களில் கழக மாணவர் அணியோடு கைகோத்துப் பங்கேற்றிருக்கிறீர்கள். நம்முடைய இந்த ஒற்றுமைதான் சங்கிகளை இன்று கதறவிட்டுக்கொண்டிருக்கிறது. இதே போல நம்முடைய ஒற்றுமை மேலும் மேலும் வளர வேண்டும். இதேபோல அவர்களின் கதறல் மேலும் மேலும் தொடர வேண்டும்.

நாம் போராடி ஒடுக்கப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மையின மாணவர்களை உயர்கல்வி படிக்க முயற்சி செய்து அனுப்புகிறோம். ஆனால், ஒன்றிய அரசின் உயர்கல்வி நிறுவனங்களில் நம் மாணவர்களைப் படிக்க விடாமல் மன உளைச்சலைத் தருகிறார்கள். ஒன்றிய அரசின் பல்கலைக்கழகங்களில் சாதி மதப் பாகுபாட்டைத் தடுக்கச் சமீபத்தில் யு.ஜி.சி சில விதிமுறைகளைக் கொண்டு வந்தது. ஆனால், ஒன்றிய பா.ஜ.க அரசு அதை எதிர்த்தார்கள். நீதிமன்றத்திற்குச் சென்று தடை ஆணை வாங்கிவிட்டார்கள். ஆனால், அந்த யு.ஜி.சி விதிமுறைகள் அவசியம் வேண்டும் என்று குரல் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள்.

### பா.ஜ.க.வின் முரட்டு அடிமை!

நீங்கள் யோசித்துப் பாருங்கள், இங்கு இருக்கக்கூடிய அடிமைக் கூட்டம். அடிமைக் கூட்டத்திற்கு இதைப் பற்றியெல்லாம் கவலை கிடையாது. ஏனென்றால், பாசிச பா.ஜ.க.வின் முழுநேர அடிமையாக அ.தி.மு.க மாறிவிட்டது. அதில் இப்போது எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்கள் மோடியின் முரட்டு அடிமையாகவே மாறிவிட்டார்.

‘சுயமரியாதை வாழ்வே சுக வாழ்வு’ என்று சொன்னார் தந்தை பெரியார் அவர்கள். ஆனால், எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி அவர்களுக்கு ‘அடிமை வாழ்வே சுக வாழ்வு’ என்று வாழ்ந்து கொண்டிருக்கிறார். கடந்த நாடாளுமன்றத் தேர்தலின்போது எடப்பாடி பழனிசாமி அவர்கள் என்ன சொன்னார்? “சிறுபான்மையின மக்களே இந்த முறை எங்களை நம்புங்கள், நாங்கள் எந்தக் காலத்திலும் பா.ஜ.கவோடு மீண்டும் கூட்டணி வைக்க மாட்டோம்” என்று சொன்னாரா இல்லையா? ஆனால், இன்று கூட்டணி வைத்ததோடு மட்டும் நிற்க வில்லை, சமீபத்தில் மதுரையில் நடந்த விஷயம் உங்களுக்குத் தெரியும். சங்கிகள் மதுரையில் கலவரம் செய்ய முயற்சி செய்தபோது, அதற்கு ஆதரவுக்குரல் கொடுத்தவர்தான் சிறுபான்மையின மக்களின் துரோகி எடப்பாடி பழனிசாமி அவர்கள். பாசிச கூட்டத்திற்குத் தமிழ்நாட்டில் இன்று ஒரு அடிமை போதவில்லை என்று புதிய அடிமைகளுக்கு வலை விரித்துத் தேடிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படிப்பட்ட பாசிஸ்டுகளையும் அடிமைகளையும் வரும் சட்டமன்றத் தேர்தலில் நாம் சேர்ந்து வீழ்த்தியாக வேண்டும்.

சிறுபான்மையின மக்களுக்குக் கழகமும் கழக அரசும் என்றைக்குமே பாதுகாப்பு அரணாக நிற்கும். கழகம் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வந்திருக்கிறதோ அப்போதெல்லாம் இஸ்லாமிய மக்கள் நலனுக்காகப் பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி இருக்கிறோம். முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்தான் மிலாது நபியை அரசு விடுமுறையாக அறிவித்து விடுமுறை அளித்தார்.

அதேபோல உருது பேசும் முஸ்லிம்களைப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் சேர்த்தவர் டாக்டர் கலைஞர் அவர்கள். இஸ்லாமிய மாணவர்களுக்காகப் பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் 3.5 சதவிகித இட ஒதுக்கீடு தந்தவர் கலைஞர் அவர்கள். கலைஞர் வழியில் நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இன்று ஏராளமான திட்டங்களைத் தந்து கொண்டிருக்கிறார்.

### தமிழ்நாடு ஹஜ் இல்லம்!

சென்னையில் 40 கோடி ரூபாய் மதிப்பீட்டில் தமிழ்நாடு ஹஜ் இல்லம் கட்டும் பணிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு மாநில ஹஜ் குழுவுக்கு நிர்வாக மானியம் ஆண்டுக்கு 80 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டிருக்கிறது. சுமார் 25 கோடி ரூபாய் அளவிற்கு ஹஜ் பயண மானியம் வழங்கப்படுகிறது.

தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம் மூலமாக 207 கோடி ரூபாய்க்குக் கடன்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. சிறுபான்மையின கிராமப்புறப் பெண் குழந்தைகளின் கல்வியை ஊக்குவிக்கச் சுமார் 5 கோடி ரூபாய் ஊக்கத்தொகை வழங்குகிறது நம்முடைய திராவிட மாடல் அரசு.

சில நாட்களுக்கு முன்பு கூட உங்களின் கோரிக்கைகளை ஏற்று முதலமைச்சர் அறிவிப்புகளை வெளியிட்டார்கள். உலமாக்களுடைய ஓய்வூதியத்தை ரூபாய் 3,000லிருந்து 5,000ஆக உயர்த்திக் கொடுத்தவர் நம்முடைய முதலமைச்சர் அவர்கள். சென்னை, மதுரையில் இருப்பது போன்று கோயம்புத்தூரிலும் ஒரு வக்ஃப் தீர்ப்பாயம் அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிறார்.

ஏற்கனவே இருக்கின்ற பள்ளிவாசல்கள், தர்காக்கள், வக்ஃபு நிறுவனங்களைப் புனரமைக்க 23 கோடி ரூபாய் நிதியையும் ஒதுக்கீடு செய்திருக்கிறார் நம் முதலமைச்சர் அவர்கள். இப்போது கபர்ஸ்தான்கள் இல்லாத இடங்களில் மாநகராட்சி மூலம் அரசு நிலம் தேர்ந்தெடுக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

இப்படி சிறுபான்மையின மக்கள் கேட்டதையெல்லாம் கொடுக்கக்கூடிய ஒரு தலைவர், முதலமைச்சர், திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் நம்முடைய தலைவர் இருக்கிறார். ஆகவே, உங்களுக்காக இன்னும் அதிகமாக உழைக்க நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகமும் நம்முடைய திராவிட மாடல் அரசும் காத்துக்கொண்டிருக்கிறது. சிறுபான்மையின மக்கள் எப்போதும் போல நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு என்றும் துணையாக இருக்க வேண்டும்.

### வென்று காட்டுவோம்!

நம் கூட்டணி குறைந்தது 200 இடங்களில் வென்று காட்டுவோம் என்று நம் தலைவர் அவர்கள் சொல்லியிருக்கிறார். வெல்வோம் இருநூறு, படைப்போம் வரலாறு. நாம் ஒற்றுமையுடன் உழைத்தோம் என்றால் 200 அல்ல, 200க்கும் அதிகமான தொகுதிகளில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி நிச்சயம் வென்றுகாட்டும்.

எனவே, அதற்கான பணிகளை இப்போதே நீங்கள் தொடங்க வேண்டும் என்று உங்களையெல்லாம் உரிமையுடன் கேட்டுக்கொள்கிறேன். சமூகநீதி மாணவர் இயக்கத்தின் பணிகள் மேன்மேலும் சிறக்க வேண்டும். உங்கள் மக்கள் பணி இதைவிட இன்னும் பல மடங்கு பெருகித் தொடர வேண்டும்.

சமூக நீதி மாணவர் இயக்கத்தின் நிர்வாகிகள், மாணவர்கள் அனைவருக்கும் எனது வாழ்த்துகளைத் தெரிவித்து, இந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்த உங்கள் அனைவருக்கும் மீண்டும் நன்றி தெரிவித்து விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வாழ்த்திப் பேசினார்.

### பங்கேற்றோர்!

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழக தலைவரும், சட்டமன்ற உறுப்பினருமான பேராசிரியர் ஜவாஹிருல்லா, வி.ஐ.டி பல்கலைக்கழக நிறுவனர் மற்றும் வேந்தர் முனைவர் விஸ்வநாதன், மனிதநேய மக்கள் கட்சி பொதுச்செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான அப்துல் சமது, தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் பேராசிரியர் ஹாஜா கனி, தி.மு.கழக சென்னை மேற்கு மாவட்டச் செயலாளர் நே.சிற்றரசு, சட்டமன்ற உறுப்பினர்கள் மருத்துவர் எழிலன், பிரபாகர் ராஜா, கழகத்தின் சிறுபான்மையினர் நல உரிமைப் பேரவையின் மாநிலச் செயலாளர் மருத்துவர் ஜூபேர்கான், கழக செய்தி தொடர்புக் குழு துணைச் செயலாளர் மருத்துவர் ஹபீஸ், கழகத் தொண்டரணி மாநிலத் துணைச் செயலாளர் எஸ்.எம்.கே.அண்ணாதுரை, த.மு.மு.கவின் மாநிலப் பொருளாளர் ஷஃபியுல்லாகான், மனிதநேய மக்கள் கட்சியின் மாநிலப் பொருளாளர் கோவை உமர், சமூக நீதி மாணவர் இயக்கத்தின் மாநிலச் செயலாளர் கோவை அம்ஜத், மாநிலப் பொருளாளர் ஆவடி அஜீஸ், மாநில அமைப்புச் செயலாளர் மாயவரம் அமீன், மாணவியர் ஒருங்கிணைப்பாளர் ஜமீலா ஜமால், துணைச் செயலாளர்கள் திருச்சி ஹபீஸ், முகமது, பொதக்குடி ரியாஸ், மதுரை ரியாஸ், கழக தலைமைச் செயற்குழு உறுப்பினர் நுங்கை வி.எஸ்.ராஜ், ஆயிரம் விளக்கு பகுதிச் செயலாளர்கள் மா.பா.அன்புதுரை, வினோத் வேலாயுதம், த.மு.மு.க, ம.ம.க மத்திய சென்னையின் தெற்கு மாவட்டத் தலைவர் ரசூல், த.மு.மு.கவின் மாவட்டச் செயலாளர் ஜாகிர், ம.ம.கவின் மாவட்டச் செயலாளர் சதாம் உசேன் உள்பட பலரும் கலந்து கொண்டனர்.